மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1—11—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 10-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

144. எஸ்டேட் அதிகாரிக்குண்டான அதிகாரத்தினை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஏனைய அதிகாரிகளுக்கு ஒப்படைப்பது குறித்து வருவாய்த் துறையின் 23—1—1989 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (உரிமையற்ற ஆளுகையினை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

145. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 13—2—1989 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

146. தஞ்சாவூர் அங்காடிக் குழுமத்திலிருந்து சில கிராமங் களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 31—3—1989 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

147. கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் விற்ப னைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12—5—1989 ஆம் நாளிட்ட

1989 அக்டோபர் 31]

333 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

148. சென்னை, எம்.ஈ.ஏ.பி. அசோசியேஷன் ஆஃப் இந்தியா அவர்களால் விற்பனை செய்யப்படும் சிமெண்ட், சிமெண்ட் பலகைகள் இரும்பு மற்றும் எஃகுகளுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 6—6—1989 ஆம் நாளிட்ட 413 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

149. சேலம் மாவட்ட மாவுப்பசை மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தர்மபுரி மாவட்ட மாவுப்பசை உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினரால் விற்பனை செய்யப்படும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவுப்பசைகளுக்கு விதிக்கக் கூடிய 5 சதவீத பல்முனை வரியினை 4 சதவீத பல்முனை வரியாக குறைத்து 1—4—1988 ஆம் நாள் முதல் 31—3—1992 ஆம் நாள் முடியவுள்ள கால அளவிற்கு நீட்டிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 27—6—1989 ஆம் நாளிட்ட 467 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

150. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1989) நடைமுறைக்கு வரும் நாளினை குறிப்பது பற்றிய வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12—7—1989 ஆம் நாளிட்ட 531 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

151. 1—4—1974 ஆம் நாள் முதல் 8—5—1979 ஆம் நாள் முடியவுள்ள கால அளவிற்கு மரவள்ளிக் கிழங்குத் திப்பி மற்றும் பருத்தி விதைகள் உமிகளுக்கு விதிக்கக்கூடிய மேல்வரி மற்றும் கூடுதல் வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 3—5—1988 ஆம் நாளிட்ட 693 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

152. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றத் தேர்தல் விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 28—2—1989 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1919 ஆம் ஆண்டு மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (டி) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

153. குன்னூர் மற்றும் கோயம்புத்தூர் ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1—4—1989 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

154. ஊறுகாய் பாக்கெட்டுகள், அப்பளங்கள் மற்றும் வடங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது மற்றும் வ.வ.ச.அ. துறையின் 26—3—1983 ஆம் நாளிட்ட 1(1)/வ.வ.ச.அ./164(சி)/81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது ஆகியன குறித்த வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 26—4—1988 ஆம் நாளிட்ட 297 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

155. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனைக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 28—7—1989

1989 அக்டோபர் 31]

ஆம் நாளிட்ட 577 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

156. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதிமன்ற விதிகளை வகுப்பது குறித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், முதல் அமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறையின் 5—1—1989 ஆம் நாளிட்ட 15 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1986 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1986) 62(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

157. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதி விதிகளை வகுப்பது குறித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், முதல் அமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறையின் 29—9—1988 ஆம் நாளிட்ட 84 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1986 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1986) 62 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

158. தமிழ்நாட்டில் உள்ள கண்காணிப்பு இல்லங்கள் மேலாண்மை விதிகளை வகுப்பது குறித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முதல் அமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறையின் 5—10—1988 ஆம் நாளிட்ட 92 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1986 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1986) 62(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

159. தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நல வாரிய விதிகளை வகுப்பது குறித்து சமூக நலத் துறையின் 28—4—1988 ஆம் நாளிட்ட 1193 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1986 ஆம் ஆண்டு இளஞ்சிறார்கள் நீதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1986) 62(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

160. 1987 ஆம் ஆண்டு அரசு பிற்காப்பு அமைப்புகள் (தமிழ் நாடு) மேலாண்மை விதிகளை வகுப்பது குறித்து சமூக நலத்

துறையின் 26—10—1989 ஆம் நாளிட்ட 1985 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1986 ஆம் ஆண்டு இளஞ் சிறார்கள் நீதிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1986) 62(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

161. சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்திற்கு திட்ட அதிகாரிகளை எஸ்டேட் அதிகாரிகளாக பணி நியமனம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 17—11—1988 ஆம் நாளிட்ட 2168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

162. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1986—87 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

163. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1986—87 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

164. தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

165. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1988 ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (வணிகம்) (எண் 1/1989) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

166. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1988 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான (சிவில்) 4 (எண் 2/1989) (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம்).

1989 அக்டோபர் 31]

167. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 31—3—1988 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (வருவாய் நிறுவனங்கள்) (எண் 3/1989) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

15. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1987—88 ஆம் ஆண்டிற்கான இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

16. 1987—88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பொது நிறுவனங்கள் பற்றிய ஆய்வுரை (ஆங்கிலம்).

17. பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

18. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை, 1989—90.

19. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1989—90.

20. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1989—90.

21. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கை, 1989—90.